30-05-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : விடுதலைப் போராட்டத்தில் வன்முறையின் வகிபாகம்**

உலக வரலாற்றில் விடுதலைப் போராட்டங்கள் அமைதிவழியில் வெல்லப்பட்டனவல்ல. இன்று அமைதிவழிப் போராட்டமே வெல்வதற்கான வழிமுறையாகப் போதிக்கப்படுகிறது. இதற்கு மகாத்மா காந்தியும் நெல்சன் மண்டேலாவும் உதாரணமாகக் காட்டப்படுகிறார்கள்.

ஆனால் இந்திய விடுதலைப்போராட்டத்தின் வெற்றியில் ஆயுதப்போராட்டத்தின் வலிமையான பங்களிப்பும் வன்முறையின் பங்கும் திட்டமிட்டு மறைக்கப்படுகிறது. தென்னாபிரிக்க விடுதலையைச் சாத்தியமாக்கியது ஆபிரிக்க தேசிய காங்கிரசின் ஆயுதப் போராட்டமே.

காலனியாதிக்கத்துக்கு எதிரான யுத்தத்தில் ஆயுதம் தாங்கிய எதிரியை ஆயுதமில்லாமல் எதிர்கொள்ள முடியாது. இதனால் ஆயுதப் போராட்டமும் வன்முறையும் தவிர்க்கவியலாதன என்றார் பனான். அவர் அல்ஜீரிய விடுதலைப்போராட்டத்தில் வெற்றிபெறவேணடுமானால் வன்முறை பயன்படுத்தப்படுவதே வழி என நம்பி அதன்படி போராட்டங்களை முன்னெடுத்தவர். அதில் வெற்றியும் கண்டவர்.

பனான் தனது *wretched of earth* என்ற நூலில் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைப் போராட்ட வடிவங்களைப் பற்றிப் பேசுகிறார். 'நீதி என்பது அரசின் வன்முறை, வன்முறை என்பது மக்களின் நீதி' என்ற கருத்தியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலையின் அடிநாதமாக இருக்கும் வன்முறையை போராட்டத்தின் தவிர்க்கவியலாத நியதி என்கிறார் பனான். அரச வன்முறைக்குள்ளாகி நிர்க்கதியாகி நிராயுதபாணிகளாக இருக்கும் மக்களின் ஒரே ஆயுதம் பயங்கரவாதம் மட்டுமே என்று வாதிடும் பனான் ஒடுக்கப்பட்டவர்களின் ஆயுதக்கிளர்ச்சிக்கு ஒரு புதிய வடிவத்தையும் தருகிறார்.

பனானின் கருத்தியலைக் கோட்பாட்டுருவாக்கம் செய்தவர் அமில்கர் கப்ரால். இவர் விடுதலைப்போராட்டத்தில் வன்முறையின் பயன்பாட்டின் தேவை மற்றும் அதன் வழிமுறைகளைப் பற்றியும் போராட்ட அமைப்புகள் வன்முறையை ஒரு மூலோபாயமாகவன்றி தந்திரோபாயமாக பயன்படுத்தவேண்டியதன் தேவையை வலியுறுத்தியவர்.

அடக்குமுறையாளர்கள் தாங்கள் அடக்கியாள விரும்புகிற சமூகத்தின் அடையாளங்களை இல்லாதொழிப்பதன் மூலம் அவர்கள் மீது கட்டற்ற அதிகாரத்தைச் செலுத்த முடியுமென்பதால் அதற்கான செயற்பாடுகளில் இறங்குவர்கள். இதனால் அடக்குமுறைக்கு ஆட்பட்டிருக்கும் சமூகங்களுக்குத் தங்கள் பண்பாட்டையும் அடையாளங்களையும் பேணுவதே மிகப்பெரிய சவாலாகிறது. கட்டற்ற வன்முறை பிரயோகிக்கப்படும் போது இருப்புக்கான போராட்டத்தில் பதில் வன்முறை கட்டாயமானது மட்டுமல்ல அவசியமானது என்று சொல்கிறார் அமில்கர் கப்ரால்.

தூரநோக்குடனான கட்சியின் வழிகாட்டல், வன்முறைய எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான தெளிவான பார்வை, மக்கள் இயக்கங்களுக்கும் மக்கட் போராட்டங்களுக்குமே முன்னுரிமை கொடுக்கும் அரசியற் பார்வை போன்றன போராட்டம் ஆயுத வழிபாட்டினை நோக்கிப் போய் சீரழிவதைத் தடுத்து நிறுத்தியது.

இலங்கையில் அறுபதுகளில் சாதியொழிப்புப் போராட்டங்களை வடபுலத்தில் கம்யூனிஸ்டுக்கள் முன்னெடுத்த வேளையில் மரபான இராணுவம் ஒன்றினை உருவாக்கிக்கொண்டு மக்களை விட்டு அந்நியப்பட்டு நின்று போராட்டங்கள் தொடங்கப்படவில்லை. மாறாக, சமூக நீதிக்கான மக்கள் இயக்கங்களை அமைதி வழியில் உருவாக்கி முன்னெடுத்தபோது வந்த வன்முறையான ஒடுக்குமுறைக்கு எதிராக மக்களே புரட்சிகர வன்முறைக்குக் கட்சியை ஊக்குவித்த நிலையே காணப்பட்டது.

அதன்போதுகூட மிக மிகக்கவனமாக வன்முறை கையாளப்பட்டது. தூரநோக்குடனான கட்சியின் வழிகாட்டல், வன்முறைய எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான தெளிவான பார்வை, மக்கள் இயக்கங்களுக்கும் மக்கட் போராட்டங்களுக்குமே முன்னுரிமை கொடுக்கும் அரசியற் பார்வை போன்றன போராட்டம் ஆயுத வழிபாட்டினை நோக்கிப் போய் சீரழிவதைத் தடுத்து நிறுத்தியது.

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**விளையாட்டில் சூதாட்டமும் போட்டி நிர்ணயமும்**

க. கோபிகிருஷ்ணா | 06-06-2013



வ. அ. இராசரத்தினம்

***வ. அ. இராசரத்தினம் (பி. ஜூன் 5, 1925, மூதூர்) புகழ் பெற்ற ஈழத்து சிறுகதை, நாவல் எழுத்தாளர்.*** சுருக்கமாக வ. அ. என அறியப்படுபவர். ஈழநாகன், கீழக்கரை தேவநேயப் பாவாணர், வியாகேச தேசிகர் என்னும் பல புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள நூல்கள் :

துறைக்காரன் (நாவல்)
கொழுகொம்பு (நாவல்)
கிரௌஞ்சப் பறவைகள் (நாவல்)
ஒரு காவியம் நிறைவு பெறுகிறது (சிறுகதைத் தொகுதி)
ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது (நாவல்)
தோணி (சிறுகதைத் தொகுதி)
பூவரசம் பூ (மொழிபெயர்ப்புக் கவிதை)
மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு (சரித்திரம்)
இலக்கிய நினைவுகள் (நினைவுக் கட்டுரைகள், அன்பர் வெளியீடு, திருக்கோணமலை, 1995)

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## ஃபிஜீ தீவில் தமிழர்

*(ஃபிஜீ தீவில் தமிழர் நிலை தொடர்பான ப. திருநாவுக்கரசு அவர்களுடைய கட்டுரையின் சிறு பகுதி)*

ஆஸ்திரேலியாவின் கிழக்கில் தென் பசுபிக் பெருங்கடலில் 7055 சதுரமைல் பரப்பில் சிதறிக் கிடக்கும் 300 தீவுக் கூட்டங்களைத்தான் பீஜித் தீவு என அழைக்கப்படுகிறது. தீவின் தலைநகரம் சுவா. பிரிட்டீஷ் குடியேற்றமாக இருந்த பீஜித்தீவு 1970 இல் விடுதலை அடைந்தது.

1874-ஆம் ஆண்டு பீஜித்தீவு பிரிட்டனின் முழுக்குடியேற்றமானது. ஆள் பிடித்து கரும்புத் தோட்டத்திற்கு கொண்டு வரும் கங்காணி முறை மூலம் 1879-1916க்கு இடையே கப்பல்களில் 65,000 இந்தியத் தொழிலாளர்கள் வந்தனர். பீஜியில் தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத்தை அமைத்த சென்னை மாகாணத்திலிருந்து சென்ற ஸ்ரீ சாது குப்புசாமி எழுதிய குறிப்பு கூறுவதாவது: "5 வருச அக்ரிமெண்டு ஒப்பந்தத்தில் சி.எஸ்.ஆர் கம்பெனி வேலைக்கு நான் வந்தபோது புருஷர்களும் ஸ்தீரிகளும் ஒப்பந்தத்தில் வந்திருந்தார்கள். அச்சமயத்தில் சி.எஸ். ஆர் கம்பெனி கொலம்பர்கள் என்னும் அதிகாரிகள் ஒப்பந்த முறையில் வந்த ஜனங்களுக்குத் தன் வாயால் சொல்வதே சட்டம்.

கொலம்பர்களுக்குக்கீழ் இருந்து வேலை செய்யும் அதிகாரிகளைச் 'சர்தார்' என்பார்கள். கொலம்பர்கள் வாயால் சொல்லும் வார்த்தைகளைச் சர்தார்கள் நடைமுறையில் நிறைவேற்ற வேண்டும். ஒப்பந்த ஆள்களுக்கு ஒவ்வொரு தினமும் இவ்வளவு வேலை செய்ய வேண்டும் என்ற திட்டங்களைக் கொலம்பர்கள் சர்தார்களுக்குச் சொல்வார்கள். சொல்லும் அளவுக்கு திட்டப் பிரகாரம் வேலை செய்து முடிக்காத ஆள்களுக்கு புருஷர்களாயினும் பெண் மக்களாயினும், சர்தார்களும் கொலம்பர்களும் அவர்களைக் கீழே தள்ளி மார்பு மேல் குத்தினார்கள். உதைத்தார்கள். கூலியைக் குறைத்தார்கள். வாயால் சொல்லத் தகாத அசிங்கமான வார்த்தைகளால் புருஷர்களையும் ஸ்திரீகளையும் திட்டினார்கள். இதுவன்றிக் குறித்த அளவு திட்டப்படி வேலை செய்து முடிக்காததைப் பற்றிச் சில சமயங்களில் கொலம்பர்கள் மாஜிஸ்ட்ரேட்டுகளிடம் போய்ச் சொல்லுவார்கள். இதைப் பற்றிக் கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று சம்மனும் வரும். குறித்த அளவுப்படி செய்யாத குற்றத்தால் கோர்ட்டுகளில் அபராதமும் விதிப்பதுண்டு. கரும்பு எஸ்டேட்டுகளில் சாதாரணமாய் ஜனங்கள் செய்து வந்த வேலைகளாவது: ஏர் உழுதல், கரும்பு நடல், புல்வெட்டுதல், மோரி வெட்டுதல், கரும்பு வெட்டுதல், கரும்புக்கு உப்பு எரு முதலியன போடுதல்.

இதுவும் தவிர ஒப்பந்தக் கூலிகளாகிய புருஷர்களையும், சர்தார்மார்களும் கொலம்பர்களும் கரும்பு வயல்களில் செய்யும் இம்ஸைகளைப் பொறுக்க முடியாமல் எதிர்த்து அடித்த அக்குற்றங்களுக்காக, சர்க்காரால் தண்டனை விதிக்கப்பட்டு ஜெயிலுக்குப் போய் வந்தவர்கள் அநேகம் பேர்கள்.

அக்ரிமெண்டில் கொண்டு வந்தவர்களுக்கு சராசரி நான்கு புருஷர்களுக்கு மத்தியில் ஒரு ஸ்தீரி வீதம் வந்தார்கள். இதனால் எண்ணற்ற கொடுமைகளும் கொலைகளும் நடந்தன. இக்குற்றங்களால் தூக்கு தண்டனையும் அடைந்தார்கள். பாரத தேசத்திலிருந்து பீஜிக்கு ஐந்து வருஷ அக்ரிமெண்டின் கெடுவு தீர்ந்து விட்ட ஜனங்கள் கய் மித்திகளிடம் லஜன் பேரில் நிலம் பிடித்துக் காடு வெட்டிப் பண்படுத்தி விவசாயம் செய்தார்கள். சிலர் சி.எஸ்.ஆர் கம்பெனி இடமே வேலையும் செய்தார்கள். மற்ற கம்பெனி களிலும் வேலை செய்தார்கள். சிலர் சொந்த வியாபாரம் செய்து வந்தார்கள். இப்படி சுயமாய்ப் பாடுபட்டு வீடுவாசல்களை அமைத்துக் கொண்டு குழந்தைக் குட்டிகளுடன் ஜ"வித்தார் கள்" -எனக் கூறும் குறிப்பிலிருந்து அன்றைய பீஜி தமிழர்களின் நிலை தெரியவருகிறது.

கடல் நீரில் எரிகின்ற கண்ணகையின் விளக்கு! -எங்கள்
உடல் போரில் எரிகையிலே எங்கிருந்தாய்? விளக்கு!
மடல் வாழை மடலெடுத்து பொங்க வைத்தோம் உனக்கு!-இந்த
மண் மீதே மடிந்திறந்தோம்! என்ன உந்தன் கணக்கு?

படவேண்டும் பாடு என்றால் படுவோம் நாம் உனக்காய்! -வற்றாப்
பளையேறும் கால்களிவை! இனி எது வேண்டும் எமக்காய்?
சுடவேண்டும் பாதமென்றால் தீ மிதிப்போம் உனக்காய்! -பிறர்
சுட வீழ்ந்த நிலை கூட நீ நேர்த்தியென்றா நினைத்தாய்?

கடற்கரையில் மகள் அமைத்த மணல் வீட்டில் ஷெல்கள்! -உன்
கோயில் மதில் மீதினிலோ ஒரு கீறல் கூட இல்லை!
இடம் பெயர்ந்து போகையிலும் தொடர்ந்தழித்தார் எம்மை!- நீ
இருந்தஇடம் இருந்துகொண்டே காத்துக்கொண்டாய் உன்னை!

கயிறிழுத்து தேர் இழுத்த கைகள் இரண்டும் அறுப்பு!-அம்மா!
கண்ணகையே! உனக்கு மட்டும் நான்கு கைகள் சிறப்பு!
உயிர் இழுத்து மீண்டு வந்தோம் இது நமக்கு பிறப்பு! -அம்மா!
உன் இருப்பை உலகத்திற்கு ஒரு கணம் நீ உணர்த்து!

ஒரு கணத்தில் ஒரு நொடியில் ஒரு மின்னல் ஒளியில்- கூப்பும்
இரு கரத்தின் இடைவெளியில் இரவில் வரும் வழியில்
தெருப் புறத்தில் மழைக் கொதுங்கும் சிறுமி இரு விழியில் -உன்
இருப்பிருக்கும் மனம் மறுக்கும்! ஏது சொல்ல மொழியில்?

அ. ஹரிஷன்

**விளையாட்டில் சூதாட்டமும் போட்டி நிர்ணயமும் (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

*சூதாட்டம், ஸ்பொட் ஃபிக்சிங், போட்டி நிர்ணயம் (match fixing) என்றால் என்ன?*

*விளையாட்டுக்களில் சூதாட்டங்கள், ஸ்பொட் ஃபிக்சிங், போட்டி நிர்ணங்களின் வரலாறு*

*சூதாட்டங்களுக்கு இந்தியன் பிறீமியர் லீக் வழிசமைத்துக் கொடுக்கிறதா?*

*இந்தியாவில் இப்போது நடக்கும் குழப்பம் என்ன?*

*சூதாட்டங்கள், முறைகேடுகள் தடுக்கப்பட முடியுமா?*

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA